**நிவித்திகல பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 24 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 20 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிவித்திகல பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்திற்காக ரூபா 640,975 தொகையும் மரணச் சடங்குகளுக்காக பொருட்கள் வழங்கப்படுவதற்காக ரூபா 40,000 தொகையுடன் ரூபா 680,975 தொகையான கடன்கொடுத்தோருக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 09 பல்வேறு விடயங்கள் தொடர்பாக செலவினப் பேரேட்டிற்கும் நிதிக்கூற்றுக்களுக்கும் இடையே ரூபா 423,138 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) பொதுச் சந்தையை நிர்மாணிப்பதற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட கடனுக்காக மீளாய்வாண்டிற்குரிய செலுத்தப்பட வேண்டிய ரூபா 61,495 தொகையான நிலுவை வட்டிக்காக கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது மூலதனச் சொத்துக்கள் விற்பனை செய்து பெற்றுக்கொண்ட ரூபா 326,000 தொகையான வருமானங்கள் நிதிச்செயற்பாட்டுக் கூற்றில் பதிவுசெய்யாத காரணத்தால் வருமானச் செலவினக் கணக்கின் படி ஆண்டிற்கான மிகையும் நிதிச் செயற்பாடுக் கூற்றின் படி, அம் மீதிக்கு இடையே ரூபா 326,000 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

05 கணக்கு விடயங்களுக்குரிய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் படி, மீதிகளினதும் பட்டோலைகளினதும் படியான மீதிகளின் வேறுபாடு ரூபா 9,491,711 ஆகக் காணப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளாறு சபையின் நிலையான வைப்புக்களின் முதலீட்டுப் பெறுமதி ரூபா 1,748,344 தொகையான போதிலும், நிலையான வைப்புக்கள் தொடர்பான வங்கி உறுதிச்சான்றிதழின் படி, அம் மீதி ரூபா 528,650 தொகையானமையால் முதலீட்டுப் பெறுமதி ரூபா 1,219,694 இற்கான வைப்புச் சான்றிதழ் அல்லது வங்கியின் மூலம் உறுதிப்படுத்தற் சான்றிதழ் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 9,795,313 தொகையான போதிலும், கடன்கொடுத்தோர் பதிவேட்டின் படி, அம்

மீதி ரூபா 8,510,638 ஆகக் காணப்பட்டது. இதன் படி, ரூபா 1,284,675 தொகையான கடன்கொடுத்தோர் தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம் | |
| 132 (ஒ) ஆம் பிரிவு | மக்கள் அங்கீகாரம் அல்லது பொது முக்கிய நடவடிக்கை அல்லது நிகழ்வு அல்லது சந்தர்ப்பம் தொடர்பாக அல்லது செலவினத்திற்காக ஒரு வருடத்திற்கு ரூபா 1,000 இற்கு மேற்பட்ட செலவினத்திற்காக அமைச்சரின் ஓர் ஆவணத்தின் மூலம் முன்னங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக 07 சந்தர்ப்பங்களின் போது ரூபா 54,556 தொகையான செலவினம் ஏற்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 1988 பிரதேச சபை ( நிதி, நிர்வாக) விதி | |
| (I) விதி 161 | வருமானச் செலவினக் கணக்குகளிற்கு உரித்தான சகல பேரேட்டுக் கணக்குகளும் பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (II) | விதி 177 | ரூபா 5,000 இற்கு மேற்படும் பொருட்கள் அல்லது பொருள் விநியோகங்களுக்காக விலைகள் கோரப்பட்டு கேள்விச் சபையின் மூலம் தீர்மானிக்கப்பட்டு குறித்த கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ் விதி கருத்திற்கொள்ளப்படாது ரூபா 173,502 செலவிட்டு நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு ரூபா 147,190 செலவிடப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

(இ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

-----------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் இலக்கம் 371 | 2010 பெப்ரவரி 09 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 200,000 தொகையான முற்பணத் தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் இலக்கம் 571 | 1993 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படும் ரூபா 342,831 தொகையான 51 வைப்பு மீதிகள் தொடர்பாக குறித்த பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் இலக்கம் 1645 | சபையிடம் உள்ள சகல வாகனங்களுக்கும் உரித்தாக முறைப்படி பூர்த்திசெய்யப்பட்ட நாளாந்த ஓட்டக் குறிப்புகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | நகர அபிவிருத்தி, புனித பூமிகள் அமைச்சுச் செயலாளரின் 2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய 1597/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஏ ஆம் பட்டோலை | சபை அதிகாரப்பகுதியில் உள்ள தொலைபேசிப் பரிமாற்றக் கம்பங்கள் தொடர்பாக முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு முறையான கட்டணங்கள் அறவிடப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2015 மே மாதம் வரையிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | மின் சக்தி, வலு சக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய பீஈ/01/01 ஆம் இலக்க சுற்றறிக்கை | கிராமப் பிரதேசங்களில் ''ஏ'' தரத்திலான வீதிகளில் வியாபாரப் பிரதேசங்களில் மின்கம்பங்களில் 110 வொட் அதிகரிக்காத வகையில் உயர் அளுத்த சோடியம் வேபர் விளக்குகள் பயன்படுத்தப்படக் கூடிய போதிலும் இவை தொடர்பாக கருத்திற்கொள்ளாது சபையால் மீளாய்வாண்டின் போது ரூபா 119,200 பெறுமதியான 250 வொட் உயர் அளுத்த 08 தெரு விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,130,970 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 494,779 ஆக இருந்தது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

2013 ஆம் ஆண்டின் நிதிச் செயற்பாடுகளின் பற்றாக்குறை ரூபா 494,779 தொகையான போதிலும் 2014 ஆம் ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 3,130,970 ஆனமையால் ஆண்டின் போது நிதி விளைவுகளில் 733 சதவீத அதிரிப்புக் காண்பிக்கப்பட்டது. இதற்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வீதவரி, வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணம், ஏனைய வருமானம் மற்றும் நன்கொடைகளின் அதிகரிப்பே இதற்குத் தாக்கமளித்திருந்தன.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 1,583 | 2,212 | 1,473 |
| வாடகை | 3,454 | 3,289 | 138 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,077 | 305 | 1.5 |
| ஏனைய வருமானம் | 8,592 | 26,901 | 7,660 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

---

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரித்த வருமானத்துடன் ஒப்பிடுகையில் அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஏனைய நன்கொடைகளின் மதிப்பிடப்பட்ட வருமானத்தைவிட சேகரிக்கப்பட்ட வருமானத்தில் முறையே 12 சதவீதம், 72 சதவீதம் மற்றும் 32 சதவீதக் குறைவைக் காட்டியது.

### 2.3.3 வீதவரி

---

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,341,168 தொகையான நிலுவை வீதவரி மீதி ஒன்று நிலவியதுடன் இதில் 05 ஆண்டுகளுக்கு மேலான நிலுவை மீதி ரூபா 451,407 ஆகக் காணப்பட்டது.

### 2.3.4 ஏக்கர் வரி

---

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 84,720 தொகையான நிலுவை ஏக்கர் வரி மீதி ஒன்று நிலவியதுடன் இதில் 05 ஆண்டுகளுக்கு மேலான மீதி ரூபா 34,772 ஆகக் காணப்பட்டது.

### 2.3.5 வாடகை

---

2013 ஆம் ஆண்டின் போது கோழி இறைச்சிக் கடை கேள்வி கோரப்படாது மாதாந்தம் ரூபா 48,000 தொகையான குறைந்த தொகைக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டில் கேள்வி கோரப்பட்டு ஆகக் கூடுவதலான விலைமனுவான ரூபா 399,600 இற்கு வாடகை வழங்கப்படுவதற்கு தீர்மானித்திருந்த போதிலும், அதன் கேள்வி மனுதாரர் முன்வாராமை காரணமாக இரண்டாம் கேள்வி மனுதாரருக்கு ரூபா 342,000 இற்கு வாடகை வழங்கப்பட்டிருந்தது. குறித்த வாடகையாளர் 2014 பெப்ரவரி முதல் ஏப்ரல் வரை வாடகைத் தொகையைச் செலுத்தத் தவறியிருந்ததுடன் அந் நிலுவைத் தொகையான ரூபா 94,050 (தாமதக் கட்டணம் 1% உள்ளடங்கலாக) கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2015 மே மாதம் வரையிலும் செலுத்தப்பட்டிராததுடன் அந் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 ஏனைய வருமானம்**

--------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2015 மே மாதம் வரையில் 19 முச்சக்கர வண்டிகளின் பதிவிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும் துணைக் கட்டளைச்சட்டம் ஒன்று பிறப்பிக்கப்பட்டு ஓர் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் முச்சக்கர வண்டி நிறுத்தற் கட்டணத்தை உழைத்துக்கொள்வதற்காக முறையான நடவடிக்கைகள் சபையால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 சனவரி 03 ஆம் திகதிய 1844 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் படி, பிரசார விளம்பரத்திற்கான கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு பிரசித்தப்படுத்தப்பட்டிருந்த போதிலும், சபை அதிகாரப் பிரதேசத்தில் விளம்பரம் குறித்து போதிய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு குறித்த கட்டணத்தை அறவிடப்பட்டிராத காரணத்தால் 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 23,960 தொகையான மிகக் குறைந்த வருமானம் உழைக்கப்பட்டிருந்தது.

(இ) சபை அதிகாரப் பிரதேசத்தில் வியாபார வரி மற்றும் கைத்தொழில் வரி தொடர்பாக போதிய மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2014 பெப்ரவரி 03 ஆம் திகதிய 1844 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் படி, விதிக்கப்பட்ட வரி 2014 ஏப்ரல் 01 ஆம் திகதிக்கு முன்னர் சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. வரிக் கொடுப்பனவு தவிர்க்கப்பட்ட அல்லது தாமதித்த நிறுவனங்கள் தொடர்பாக மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சபைக்குக் கிடைக்கும் வருமானத்தைப் பதிவு செய்வது மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.7 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2015 மே மாதம் வரையில் 2014 பெப்ரவரி முதல் திசெம்பர் வரை பெறவேண்டிய ரூபா 831,292 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முத்திரைக் கட்டணத்திற்கு உரித்தான பட்டோலை காணிப் பதிவாளர் காரியாலயத்தின் மூலம் தருவிக்கப்பட்டு குறித்த வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், இதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னாள் பிரதேச சபைத் தலைவரால் 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளில் கொண்டு செல்லப்பட்டிருந்த 02 அங்குல டீசல் இயந்திரம் ஒன்று, 02 அங்குல டீசல் இயந்திரக் குழாய் ஒன்றும், 2 அங்குல ஹோஸ் ஒன்றும், ஜீ.ஐ 20 குழாய் மற்றும் 01 பக்க இரும்பும் கணக்காய்ச் சந்தர்ப்பமான 2015 மே மாதம் வரையிலும் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தற்காலிக ஓய்வூதியமாகப் வழங்கப்பட்டிருந்த ரூபா 66,976 தொகையான முற்பணத் தொகை கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2015 மே மாதம் வரையிலும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பக்கோ இயந்திரம் கொள்வனவு செய்யப்படுவதற்காக 2006 திசெம்பர் 21 ஆம் திகதி பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 4,000,000 தொகையான கடன்

தொகை தொடர்பாக 2011 செப்தெம்பர் 30 ஆம் திகதி ரூபா 244,627 தவணைப்பணத்துடனான வட்டித்தொகையும் 2002 நவம்பர் 05 ஆம் திகதி பொது சந்தைக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1,500,000 தொகையான கடன் தொகைக்கு உரித்தான 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான ரூபா 717,052 தொகையான கடன் தவணைப்பணத் தொகையும் வட்டித் தொகையும் மீளாய்வாண்டின் இறுதி வரை அந் நிறுவகங்களுக்குக் கொடுப்பனவிற்கான நிலுவையாகக் காணப்பட்டது.

(ஈ) பல்லேகெதர தோற்பொருட் தொழிற்சாலை சப்ரகமுவ மாகாண சபை கூட்டுறவுத் திணைக்களத்திலிருந்து 2014 ஒக்டோபர் 30 ஆம் திகதி சபைக்கு ஒப்படைக்கப்பட்டு மேற்குறித்த தொழிற்சாலை ஒப்படைக்கப்படும் சந்தர்ப்பத்தின் போது நிலவிய 37,284 தொகையான மின்கட்டணம் தீர்க்கப்பட்டிருந்த போதிலும், பௌதீகப் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2015 மே 21 ஆம் திகதி வரையிலும் மின்சாரம் இணைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இத் தொழிற்சாலை இயங்கும் காணி, கட்டிடங்கள் சபைக்குப் பொறுப்பேற்கப்படுவதற்கு கணக்காய்வுத் தினம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் குறித்த சொத்துக்கள் பதிவுப் பொருளாக்கப்பட்டிருக்கவில்லை. சபைக்குப் பொறுப்பேற்கப்பட்டு 07 மாத காலங்கள் கழிந்திருந்த போதிலும் இயங்கும் நிலைக்குக் கொண்டுவரப்பட்டு அதன் மூலம் வருமானத்தை உழைத்துக்கொள்வது தொடர்பில் முறையான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபை எல்லைக்குள் இருந்த மயானத்தில் 73 மயானங்கள் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்ததுடன் அம் மயானங்களில் 46 ஏக்கருக்கும் அதிகளவு விஸ்தீரணமான 57 மயானங்கள் தொடர்பாக அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சபைக்கு முறையாக கையேற்கப்பட்டு பதிவுசெய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் உள்ள தெருக்களை ஒளியூட்டுவதற்காக ரூபா 375,540 பெறுமதியான தெரு விளக்குகளும் உபகரணங்களும் கொள்வனவு செய்யப்படுகையில் அது தொடர்பாக பிரதேசத்தில் மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு தெரு விளக்குகளின் தேவைப்பாடு முறையான வகையில் இனங்காணப்பட்டு பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தரின் முன்னங்கீகாரம் இன்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) சபை வாகனம் தொடர்பான ஓர் பதிவேடு முறையாகப் பேணப்பட்டிராததுடன் சபையின் ஒவ்வொரு வாகனம் தொடர்பான பொறுப்பும் முறையாக வாகனப் பதிவேட்டின் மூலம் எழுத்து மூலம் சாரதிக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வாகன திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட முன்னரும் திருத்தங்களின் பின்னரும் திருத்தங்கள் முறையாக மேற்கொள்ளப்பட்டமைக்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரின் சான்றுறுதிப்படுத்தல் இருக்க வேண்டிய போதிலும் ரூபா 359,020 தொகையான திருத்தவேலைகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

(அ) தனியார் நிறுவகம் ஒன்றினால் ஒழுங்கமைக்கப்பட்ட 05 நாள் வெளிநாட்டுச் சுற்றுலாவிற்காக குறித்த முறையான அழைப்புக் கடிதம் ஒன்று இல்லாது கலந்துகொண்டிருந்த சபை உறுப்பினர்கள் இருவருக்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 196,440 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், இக் கொடுப்பனவுகள் நிதி, திட்டமிடல் செயலாளரினதும் திறைசேரிச் செயலாளரினதும் 2010 ஒப்டோபர் 11 ஆம் திகதிய இல. மு.க்ர.அ. 01/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி மற்றும் மாகாண சபைகள் அமைச்சுச் செயலாளரின் 2010 செப்தெம்பர் 09 ஆம் திகதிய PL/07/01/05/26 ஆம் இலக்க சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாகக் காணப்பட்டன. ஆளனரின் முன்னங்கீகாரம் இன்றி இவ் உத்தியோகத்தர்கள் வெளிநாட்டிற்குச் சென்றிருந்ததுடன் செலுத்தப்பட்ட ரூபா 79,500 தொகையான அமையச் செலவினங்களுக்கான பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 1,257,212 தொகையான நானாவித பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகையில் 2006 அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.12.3 இன் பிரகாரம் வழங்கப்பட்ட பொருட்கள் குறித்த மாதிரியும் வேறு உடன்பட்ட நியமங்களுக்கும் இணங்குகின்றனவா என பரீட்சிக்கப்பட்டிராததுடன் அவ் வழிகாட்டல் கோவையின் 2.8.4 இன் பிரகாரம் முறையாக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது நலன்புரி நடவடிக்கைகளுக்காக ரூபா 1,364,947 தொகையான செலவினத்தை ஏற்றிருந்ததுடன் நலன்புரி வசதிகளை வழங்குவது தொடர்பில் முழுமையான தேவைப்பாடு தொடர்பாக இனங்காணப்பட்டு பதிவுசெய்யப்பட்டு நலன்பெறுனர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது தொடர்பாக முறையான நடவடிக்கைகளின் கீழ் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. அந் நலன்புரிப் பொருட்களைப் பகிர்ந்தளித்ததன் பின்னர் குறித்த செயற்பாடுகளுக்காக அப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டமைக்கு முறையான பின்தொடர் நடவடிக்கைகள் சபையால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.4 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

SG GX 4482 ஆம் இலக்க உழவு இயந்திரம் 2013 ஆகஸ்ட் 23 ஆம் திகதி முதல் குருவிட்ட அபிவிருத்தி, நிர்மாண மற்றும் இயந்திர உபகரண அதிகாரசபைக்கு பழுதுபார்ப்பிற்காக ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் போது அவ் வாகனம் பழுதுபார்க்கப்பட முடியாதென அதிகாரசபையால் அறிவிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2015 மே மாதம் வரையிலும் அவ் வாகனம் செயலிழந்த நிலையில் சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.5 ஒப்பந்த நிர்வாகம்

-----------------------------

உள்ளுராட்சி அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் சேனைப் பயிர்நிலத்தினூடாக உள்ள ஓடைக்கு அருகாமையில் பிரதான வீதியிலிருந்து இலுக்புலுவத்த வரையான வீதி பாதிப்பிற்குள்ளான பகுதிகள் கொங்கிரீட் இடப்படுவதற்காக ரூபா 495,943 தொகை மதிப்பிடப்பட்டிருந்ததுடன் ரூபா 463,599 தொகையான செலவினமும் ஏற்கப்பட்டிருந்தது. 2015 மே மாதம் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது வீதியின் இரு மருங்கிலும் மண் நிரப்பப்பட்டு சமப்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

------------------------------------------------------------------

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

18 பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 06 செலவின விடயங்களுக்கு உரித்தான ரூபா 289,000 கூட்டுத்தொகையான ஏற்பாடு எவ்வித செயற்பாடுகளிற்கும் ஈடுபடுத்தப்படாது மொத்தமாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பாதீடிடப்பட்ட ஏற்பாடு அல்லது குறைநிரப்பு ஏற்பாடு மேற்கொள்ளப்படாது 08 செலவின விடயங்களுக்கு உரித்தான ஏற்பாட்டிற்கு மேலாக ரூபா 354,178 தொகையான செலவினம் ஏற்கப்பட்டிருந்தது.

(இ) போதிய திட்டத்துடன் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிராத காரணத்தால் 04 செலவின விடயங்கள் தொடர்பாக ரூபா 1,545,228 தொகையான ஏற்பாட்டு மிகை ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) செலவின விடயங்களில் 03 செலவின விடயங்களுக்கு உரித்தான ஏற்பாடு வேறு செலவின விடயங்களுக்கு 30 சதவீதம் முதல் 97 சதவீதம் வரை மாற்றப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ஏற்பாடுகளில் இருந்தும் எவ்வித செலவினமும் ஏற்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்